(ஆறாவது பாராளுமன்றம் - நான்காவது கூட்டத்தொடர்)

**இல. 21.]**

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2009, ஓகத்து 19, புதன்கிழமை, மு. ப. 9.30 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0068 / ' 09

1.

கௌரவ ரவி கருணாநாயக்க,— மக்கள் தொடர்பாடல், தகவல் அமைச்சரும் தொழில்முயற்சி அபிவிருத்தி, முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) தற்போதைய இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனச் (SLBC) சட்டத்தின் கீழேயே அரசாங்க ஒலிபரப்பு முகவர்களுக்கும் தனியார் கம்பனிகளுக்கும் வானொலி ஒலிபரப்பிற்கான உத்தரவுப் பத்திரங்கள் விநியோகிக்கப்படுகின்றன என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனச் (SLBC) தற்போதைய இலங்கை தொலைத்தொடர்புகள் சட்டத்தின் கீழ் ஒழுங்கமைக்கப்பட்ட ஒரு நிறுவனம் என்பதையும், வானொலி ஒலிபரப்பு உத்தரவுப்பத்திரங்களை தற்போதைய இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் கீழ் விநியோகிப்பதானது ஏனைய விண்ணப்பதாரிகளையும் உத்தரவுப் பத்திரங்களையும் ஓர் அனுகூலமான நிலைக்கு உள்ளாக்குவதுடன், நியாயமான வர்த்தகம் மற்றும் சமமான வாய்ப்புக்கள் போன்றவற்றைக் கருத்திற் கொள்கையில் கைச்சாத்திடப்பட்டுள்ள உலக வர்த்தக சங்க (WTO) மற்றும் ஏனைய சர்வதேச உடன்படிக்கைகள் மீறப்படுகின்றன என்பதையும் அவர் அறிவாரா?

(இ) வானொலி ஒலிபரப்பு உத்தரவுப் பத்திரங்கள் விநியோகிக்கப்படுகின்ற, தற்போதைய இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன சட்டத்தின் ஏற்பாடுகளை நீக்குவதற்கும் இந்த ஏற்பாடுகளை தற்போதைய இலங்கை தொலைத் தொடர்புகள் சட்டம் அல்லது அது போன்றதொரு சட்டத்தின் கீழ் மீண்டும் அறிமுகப்படுத்துவதற்கும் அவர் நடவடிக்கை எடுப்பாரா என்பதை குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0087 / '09

2.

கௌரவ லக்ஷ்மன் நிபுணஆரச்சி,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போதைய அரசின் பாதுகாப்பு அமைச்சரின் பதவிக்கால ஆரம்பம் முதல் இற்றை வரை பொலிஸ் கைதில் இருக்கும்போது மரணமடைந்துள்ள சந்தேக நபர்களின் எண்ணிக்கை யாது,

(ii) மேற்படி சந்தேகநபர்களின் பெயர்கள் யாவை,

(iii) ஒவ்வொரு சந்தேகநபரும் மரணமடைந்தது எவ்வாறு

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0193 / '09

3.

கௌரவ பேமசிறி மானகே,— கடற்றொழில், நீரக வளமூலங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2009 ஆம் ஆண்டின் வரவுசெலவு திட்டத்தில் கடற்றொழில் துறைக்கு ஒதுக்கப்பட்ட பணத்தொகை எவ்வளவென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) நன்னீர் மீன்பிடித்துறைக்கு ஒதுக்கப்பட்டுள்ள பணத்தொகை எவ்வள வென்பதையும்,

(ii) இறால் வளர்ப்புக்காக ஒதுக்கப்பட்ட பணத்தொகை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) "மிகின் எயார்" விமானச் சேவைக்காக 2009 ஆம் ஆண்டின் வரவு செலவு திட்டத்தில் ஆறாயிரம் மில்லியன் பணத்தொகை ஒதுக்கப்பட்டுள்ள நிலையில் கடற்றொழில் துறைக்கு ஒதுக்கப்பட்ட பணத்தொகை போதாதென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0256 /'09

4.

கௌரவ அஜித் குமார,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கையில் தற்பொழுது இயங்குகின்ற அரசாங்க பாடசாலைகள், பிரிவெனாக்கள் மற்றும் தனியார் பாடசாலைகள் என்பவற்றின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவு,

(ii) கல்விக் கோட்டங்களின் அடிப்படையில் அவற்றின் பெயர்கள் யாவை,

(iii) மேற் குறிப்பிட்ட அரசாங்க பாடசாலைகள் மற்றும் பிரிவெனாக்கள் என்பவற்றிற்குத் தேவையான ஆசிரியர்களின் எண்ணிக்கையும் இப்பொழுதுள்ள ஆசிரியர்களின் எண்ணிக்கையும் வெவ்வேறாக எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) இலங்கையில் இயங்கிய அரசாங்க பாடசாலைகள், பிரிவெனாக்கள் ஆகியவற்றில் தற்பொழுது மூடப்பட்டுள்ளவற்றின் எண்ணிக்கை கல்விக் கோட்டங்களின் அடிப்படையில் எவ்வளவு,

(ii) அப்பாடசாலைகளும் பிரிவெனாக்களும் எந்த ஆண்டு மூடப்பட்டன,

(ii i) அவை அவ்வாறு மூடப்பட்டதற்கான காரணம் யாது

என்பதை அவர் இச்சபைக்குச் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) ஏதேனும் ஒரு காரணத்திற்காக மூடப்படவிருந்த பாடசாலைகளும் பிரிவெனாக்களும் மூடப்படுவதைத் தடுப்பதற்கு அவர் உரிய நடவடிக்கை எடுப்பாரா,

(ii) ஆமெனில், அந்நடவடிக்கை யாது

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0263 / ' 09

5.

கௌரவ பிமல் ரத்நாயக்க,— சுற்றாடல், இயற்கை வளங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) சுற்றாடல், இயற்கைவளங்கள் அமைச்சின் மூலம் "கஜ மித்துரோ" என்ற பெயரில் கருத்திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதா,

(ii) அக்கருத்திட்டத்தின் நோக்கம் யாது,

(iii) மின்சார வேலிகளை அமைப்பதற்காக "கஜ மித்துரோ" கருத்திட்டம் எவ்வளவு பணம் ஒதுக்கியிருக்கின்றது

என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) இக்கருத்திட்டத்தின் மூலம் ஆரம்பிக்கப்பட்டுள்ள ஏனைய கருத் திட்டங்களின் எண்ணிக்கை எவ்வளவு,

(ii) வெவ்வேறாக அவை யாவை,

(iii) தற்பொழுது பூர்த்தி செய்யப்பட்டுள்ள கருத்திட்டங்களின் எண்ணிக்கை எவ்வளவு, அவை யாவை,

(iv) வெற்றிகரமாக முடிக்கப்பட்ட கருத்திட்டங்களின் எண்ணிக்கை எவ்வளவு, அவை யாவை,

(v) இக்கருத்திட்டங்களுக்காக செலவிடப்பட்ட பணம் எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்குச் சமர்ப்பிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0378 / ' 09

6.

கௌரவ லக்ஷ்மன் கிரிஎல்ல,— வெளிநாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) நெதர்லாந்து அரசாங்கத்தினால் இலங்கைக்கு வழங்கப்படுகின்ற அனைத்து உதவிகளும் முற்றிலும் நிறுதத்தப்பட்டுளளதாக அந்நாட்டு அமைச்சரொருவர் நெதர்லாந்து பாராளுமன்றத்தில் குறிப்பிட்டுள்ளாரென்பதைஅவர் அறிவாரா ?

(ஆ) மேற்படி உதவிகளை நிறுத்துவதற்கான காரணம், இலங்கைக்குள் இடம்பெறுகின்ற மனித உரிமை மீறல்கள், சிவில் மக்களின் மரணங்கள் மற்றும் சட்டத்தின் உன்னதத் தன்மையை களங்கப்படுத்தல் என மேற்படி கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ளதென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா ?

(இ) நெதர்லாந்து அரசாங்கத்துடன் மீண்டும் நல்லுறவை ஏற்படுத்திக்கொள்வதற்கு வெளிநாட்டலுவல்கள் அமைச்சு எடுத்துள்ள நடவடிக்கை யாதென்பதை அவர் குறிப்பிடுவாரா ?

(ஈ) இன்றேல், ஏன் ?

0388 / '09

7.

கௌரவ சாகல ரத்நாயக்க,— மின்வலு, சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மேல் கொத்மலை நீர் மின் கருத்திட்டம், நுரைச்சோலை அனல் மின் கருத்திட்டம் மற்றும் கெரவலப்பிட்டிய இணைந்த சுற்று வலு ஆலை ஆகியவற்றின் மெகாவாட் ஒன்றுக்கான (EPC செலவு) உற்பத்தி மூலதனச் செலவினை, தற்போது ஏற்பட்டுள்ள விலை ஏற்றத்துடன் சேர்த்து அவர் வெவ்வேறாக இச்சபைக்கு அறியத் தருவாரா?

(ஆ) பின்வரும் ஆலைத்தொகுதி ஒன்வொன்றிற்குமான இயக்கத்திற்கான எரிபொருள் மற்றும் கருத்திட்டத்தின் மதிப்பீடு செய்யப்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட வரியின் அலகொன்றிற்கான செலவு ஆகியவற்றை அவர் குறிப்பிடுவாரா

(i) களனிதிஸ்ஸவில் உள்ள இலங்கை மின்சார சபைக்குச் சொந்தமான இணைந்த சுற்று ஆலை,

(ii) AES ற்கு சொந்தமான இணைந்த சுற்று ஆலை,

(iii) கெரவலப்பிட்டிய இணைந்த சுற்று ஆலைத்தொகுதி இணைந்த சுற்று நிலையில் மற்றும் ஒற்றைச் சுற்று நிலையில்,

(iv) யாழ்ப்பாணத்திலுள்ள தனியாருக்குச் சொந்தமான (IPP) ஆலை மற்றும் ஏனைய சகல IPP ஆலைகளும்,

(v) யாழ்ப்பாணத்திலுள்ள Aggreko தற்காலிக ஆலை,

(vi) இலங்கை மின்சார சபைக்குச் சொந்தமான பியட் வாயு விசையாழி.

(இ) கெரவலப்பிட்டிய கருத்திட்டத்திற்காக வெஸ்ட் கோஸ்ட் பவர் லிமிட்டெட் பெற்றுக்கொண்ட கடனிற்கான அவர்கள் இணங்கிய வட்டி வீதத்தினையும் அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0515 / '09

8.

கௌரவ ஜயந்த விஜேசேகர,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) திருகோணமலை மாவட்டத்தில் அமைந்துள்ள சகல பாடசாலைகளுக்கும் தேவையான ஆசிரியர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்,

(ii) இப்பாடசாலைகளில் தற்போதுள்ள ஆசிரியர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி மாவட்டத்தில் தற்போது நிலவுகின்ற ஆசிரியர் வெற்றிடங்களின் எண்ணிக்கை அந்தந்த விடயங்களின் பிகாரம் வெவ்வேறாக எத்தனையென்பதை அவர் இச்சபைக்கு முன்வைப்பாரா?

(இ) மேற்படி ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0070 / ' 09

9.

கௌரவ ரவி கருணாநாயக்க,— மக்கள் தொடர்பாடல், தகவல் அமைச்சரும் தொழில்முயற்சி அபிவிருத்தி, முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) கடந்த 02 வருடங்களில் அமைச்சினால் வழங்கப்பட்ட தொலைக்காட்சி மற்றும் வானொலி என்பவற்றின் ஒளி மற்றும் ஒலிபரப்பிற்கான அனைத்து உரிமங்களினதும் விபரங்களை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இவ்வுரிமங்கள் கேள்விப்பத்திர அடிப்படையிலா வழங்கப்பட்டன என்பதையும்,

(ii) பின்பற்றப்பட்ட நடைமுறையையும்,

(iii) ஒவ்வொரு உரிம வழங்கலாலும் அரசிற்குக் கிடைத்த வருமானத்தையும் அவர் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0088 / '09

10.

கௌரவ லக்ஷ்மன் நிபுணஆரச்சி,— நகர அபிவிருத்தி, புனித பகுதிகள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நகர அபிவிருத்தி திட்டத்தின் பிரகாரம் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்ட நகரம் அல்லது நகரங்கள் இருக்கின்றனவா,

(ii) ஆமெனில், அந்நகரங்கள் யாவை

என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) நகர அபிவிருத்தி திட்ட பணிகளின் பிரகாரம் 50% வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ள நகரம் அல்லது நகரங்கள் இருக்கின்றனவா,

(ii) ஆமெனில், அந்நகரங்கள் யாவை

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0207 / ' 09

11.

கௌரவ பேமசிறி மானகே,— கடற்றொழில், நீரக வளமூலங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2009 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்டத்தில் கடற்றொழிலாளர்களுக்கு நிவாரணங்கள் வழங்கப்பட்டதா என்பதையும்,

(ii) மேற்படி நிவாரணங்கள் யாவையென்பதையும்,

(iii) இந்நிவாரணங்கள் எப்போதிருந்து அமுல்படுத்தப்படுகின்றது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0264 / '09

12.

கௌரவ பிமல் ரத்நாயக்க,— சுற்றாடல், இயற்கை வளங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தினால் 2000 ஆம் ஆண்டிலிருந்து ஆரம்பிக்கப்பட்டுள்ள மின்சார வேலி அமைக்கின்ற கருத்திட்டம் சம்பந்தமான தகவல்களை அவர் இச்சபைக்கு சமர்ப்பிப்பாரா ?

(ஆ) (i) வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்துக்கு "கஜ மித்துரோ" கருத்திட்டத்தை ஒப்படைக்காமைக்கான காரணங்கள் யாவை ,

(ii) "கஜ மித்துரோ" கருத்திட்டத்தில் யானைகளுக்கான உணவு, நீர், உப்பு ஆகிய தேவைகளை பூர்த்திச் செய்வதற்கான நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டுள்ளனவா ,

(iii) ஆமெனில் மேற்படி தேவைகளுக்காக சிறு குளங்களை அமைத்தல் குறித்த கருத்திட்டத்தினால் இணங்காணப்பட்டுள்ளதா,

(iv) இதற்காக ஒதுக்கப்பட்ட பணத்தொகை மற்றும் இற்றை வரை அமைக்கப்பட்டுள்ள சிறு குளங்களின் எண்ணிக்கை சம்பந்தமான தகவல்கள் யாவை

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா ?

(இ) இன்றேல், ஏன் ?

0208 / ' 09

13.

கௌரவ பேமசிறி மானகே,— கடற்றொழில், நீரக வளமூலங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2008 சனவரி மாதம் முதல் இற்றைவரையிலான காலப்பகுதியில் எத்தனை வாவிகளிலும் நீர்த்தேக்கங்களிலும் மீன் வளர்ப்பு ஆரம்பிக்கப் பட்டுள்ளதென்பதையும்,

(ii) மேற்படி வாவிகளும் நீர்த்தேக்கங்களும் யாவையென்பதையும்,

(iii) இவற்றில் வளர்க்கப்படும் மீன் இனங்கள் யாவையென்பதையும்,

(iv) மேற்படி வாவிகள் மற்றும் நீர்த்தேக்கங்களின் மீன் உற்பத்தி எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0266 / '09

14.

கௌரவ பிமல் ரத்நாயக்க,— சுற்றாடல், இயற்கை வளங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) சுற்றாடல், இயற்கை வளங்கள் அமைச்சிற்கு மாதாந்த வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கட்டிடங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) இவை எத்தேவைகளுக்காக என்பதையும்,

(iii) மேற்படி கட்டிடங்களுக்காக மாதாந்தம் செலுத்தப்படும் மாதாந்த வாடகை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்,

(iv) மேற்படி கட்டிடங்களின் உரிமையாளர்கள் யாரென்பதையும்,

(v) இவை எந்த வகையில் பெற்றுக்கொள்ளப்படுகின்றன என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) தெஹிவளை, காலி வீதி 04 ஆம் இலக்க முகவரியில் அமைந்துள்ள கட்டிடம் எந்த நிறுவனத்திற்காக கொள்வனவு செய்யப்பட்டுள்ளது என்பதையும்,

(ii) இது எந்த ஆண்டிலிருந்தென்பதையும்,

(iii) அதன் மாதாந்த வாடகை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## சட்டமூல சமர்ப்பண முன்னறிவித்தல்

1.

சுற்றாடல், இயற்கை வளங்கள் அமைச்சர்,— காடு (திருத்தம்),— காட்டுக் கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்.

2.

சுற்றாடல், இயற்கைவளங்கள் அமைச்சர்,— சுரங்கங்கள், கனிப்பொருட்கள் (திருத்தம்),— 1992 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, சுரங்கங்கள், கனிப்பொருட்கள் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்.

## பிரேரணை முன்னறிவித்தல்

3.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வு,— 7 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினாலும் 2009.05.26 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணையினாலும் தடைபெறாமல் இன்றைய தினம் சபை அமர்வு நேரம் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 5.30 மணிவரை இருக்குமாக. பி. ப. 3.30 மணிக்கு 7 (5) ஆம் இலக்க நிலையியற் கட்டளை தொழிற்படுமாக.

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*1.

மின்வலு, சக்தி அமைச்சர்,— குறைநிரப்பும் தொகை — தலைப்பு 119, நிகழ்ச்சித்திட்டம் 02 ,— † 2009 ஆம் ஆண்டு சனவரி மாதம் 1 ஆம் திகதி தொடங்கி 2009 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆம் திகதி முடிவடையும் நிதியாண்டின் சேவைக்கு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் திரட்டு நிதியத்தினின்றும் அல்லது இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கத்தினதும் அல்லது இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசாங்கம் பயன்படுத்தக்கூடிய வேறெந்த நிதியிலிருந்தும் அல்லது பணத்திலிருந்தும் அல்லது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கம் பெற்றிருக்கும் எந்தக் கடன் நிதியத்திலிருந்தும் இரண்டாயிரத்து நாநூறு மில்லியன் (ரூபா 2,400,000,000) ரூபாவிற்கு மேற்படாத குறைநிரப்பும் தொகையொன்று வழங்கப்படல் வேண்டும். அத்தொகை பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப் பட்டுள்ளவாறு செலவு செய்யப்படலாம்:-

அட்டவணை

| | | | |
|---|---|---|---|
| தலைப்பு: 119 | — | மின்வலு, சக்தி அமைச்சு | |
| நிகழ்ச்சித்திட்டம் : 02 | — | அபிவிருத்திச் செயற்பாடுகள் | |
| | — | ஆக்கப்பொருட் செலவு | ரூ. 2,400,000,000 |
| | | | ரூ. 2,400,000,000 |

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

† 2009, ஓகத்து மாதம் 6 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2009 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க குறைநிரப்பும் மதிப்பீட்டைப் பார்க்க. இலக்கம் 1 முதல் 9 வரையுள்ள குறைநிரப்பும் மதிப்பீடுகளின் மொத்தம் ரூபா. 16,445,510,000.

*2.

பிணைப் பொறுப்பளிக்கப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

*3.

இலங்கை பிணையங்கள், பரிவர்த்தனை ஆணைக்குழு (திருத்தம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*4.

ஊழியர் சகாய நிதிய (விசேட ஏற்பாடுகள்) (திருத்தம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*5.

இந்தியக் குடிவரவு தொழிலாளர் (நீக்கம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*6.

பாராளுமன்ற தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*7.

சொத்துக்களால் ஆதாரப்படுத்தப்பட்ட பிணைப் பொறுப்பளித்தல் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*8.

காப்புறுதித் தொழிலை ஒழுங்குபடுத்தல் (திருத்தம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

*9.

தவணை தவறிய வரிகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*10.

இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*11.

இலங்கைப் பகிரங்கத் தொழில் முயற்சிகள் சீர்திருத்த ஆணைக்குழு (நீக்கச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*12.

குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்பு சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூன் 17, 2008) [1].

*13.

ஆளுநர்களின் ஓய்வூதிய சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*14.

மிகைப்பொருள் திணிப்பெதிர்ப்பு மற்றும் எதிரீட்டுத் தீர்வைகள் சட்டமூலம்— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (ஏப்பிறல் 04, 2006) [1].

*15.

வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*16.

செயலூக்கமற்ற சொத்துக்கள் (மீட்புச்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*17.

சூதாட்ட (விசேட ஏற்பாடு) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*18.

முற்பாதுகாப்பு வழிமுறைகள் சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (ஏப்பிறல் 04, 2006) [1].

*19.

குடியியல் வான்செலவு சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*20.

பல்கலைக்கழகங்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*21.

குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*22.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.1),— 06/2006 ஆம் இலக்கமும் 2006.04.25 ஆம் திகதியும் கொண்ட பொது நிர்வாக சுற்றுநிருபத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக 2006.01.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பிரதம நீதியரசர், உயர் நீதிமன்ற நீதிபதிகள், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர், மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் ஆகியோருக்கான மாதாந்த சம்பளங்கள் பின்வருமாறு அமைய வேண்டுமென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 108(1) ஆம் உறுப்புரையின் கீழ் இந்தப் பாராளுமன்றத்தினால் இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.

| | |
|---|---|
| மாண்புமிகு பிரதம நீதியரசர் | ரூ.70,000.00 |
| | ரூ. 1,500.00 |
| உயர்நீதிமன்ற நீதிபதிகளும் மேன்முறையீட்டு | |
| நீதிமன்றத்தின் தலைவரும் | ரூ. 65,000.00 |
| மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் | ரூ. 63,500.00 |

மேலும், உயர்நீதிமன்றத்தினதும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினதும் நீதிபதிகளுக்குச் செலுத்தப்பட வேண்டிய சம்பளங்களாக 2004 செத்தெம்பர் மாதம் 09 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து நிறைவேற்றப்பட்ட சம்பளத்திட்டங்களுக்குப் பதிலாக, இப்பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் சம்பளங்கள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டு மென இந்தப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*23.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.2),— 2008.07.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பிரதம நீதியரசர், உயர்நீதிமன்ற நீதிபதிகள், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர், மேன்முறையீடு நீதிமன்ற நீதிபதிகள் ஆகியோருக்காக, சம்பளத்தின் 25% இற்குச்சமமான மாதாந்த ஆள்சார் படியொன்றைச் செலுத்துவதற்கு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 108(1) ஆம் உறுப்புரையின் கீழ் இந்தப் பாராளுமன்றத்தினால் இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.

மேலும், உயர்நீதிமன்றத்தினதும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினதும் நீதிபதிகளுக்குச் செலுத்தப்பட வேண்டிய ஆள்சார் படிகளாக பாராளுமன்றத்தினால் 1998 மாச்சு மாதம் 17 ஆம் திகதி நிறைவேற்றப்பட்ட படிகளுக்குப் பதிலாக, இப்பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் ஆள்சார் படிகள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென இப்பாராளு மன்றத்தினால் மேலும் தீர்மானிக்கப்படுகின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*24.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.3),— மேலும், 2007.08.01 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பிரதம நீதியரசரும் உயர்நீதிமன்ற நீதிபதிகளுக்கும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவருக்கும் மேன்முறையீடு நீதிமன்ற நீதிபதிகளுக்கும் கீழ்க்காணுமாறு மாதாந்த வீட்டு வாடகைப் படிகள் செலுத்தப்பட வேண்டுமென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 108(1) ஆம் உறுப்புரையின் இப்பாராளுமன்றத்தினால் மேலும் தீர்மானிக்கப்படுகின்றது.

| | |
|---|---|
| மாண்புமிகு பிரதம நீதியரசர் | ரூ. 27,500.00 |
| உயர்நீதிமன்ற நீதிபதிகள், மேன்முறையீட்டு நீதிபதிகளின் தலைவர் | ரூ. 25,000.00 |
| மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் | ரூ. 22,500.00 |

மேலும், உயர் நீதிமன்றத்தினதும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினதும் நீதிபதி களுக்குச் செலுத்தப்பட வேண்டிய வீட்டு வாடகைப் படியாக 2004 செத்தெம்பர் மாதம் 09 ஆந் திகதி பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்ட படிக்குப் பதிலாக, இப் பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்ட வீட்டு வாடகைப் படி நடைமுறைப்படுத்தப் பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்படுகின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*25.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.4),— 2008.07.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு, பிரதம நீதியரசருக்கு உபசரணைப் படியாக மாதாந்தம் ரூ. 3,500 படியொன்றைச் செலுத்துவதற்கு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 108 (1) ஆம் உறுப்புரையின் கீழ் இப்பாராளுமன்றத்தினால் இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.

மேலும் இதற்கு முன்னர் பிரதம நீதியரசருக்காக பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்ட உபசரணைப் படிக்குப் பதிலாக, இப்பிரேரணையினால் தீர்மானிக்கப் படும் உபசரணைப் படி நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென இப்பாராளுமன்றத் தினால் தீர்மானிக்கப்படுகின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*26.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் கீழ் கட்டளை,— (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ் சனாதிபதியினால் மதுவரி தொடர்பில் ஆக்கப்பட்டு 2008, ஏப்பிறல் மாதம் 10 ஆந் திகதிய 1544/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2008.06.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

*27.

தபால், தொலைத்தொடர்புகள் அமைச்சர்,— அஞ்சல் அலுவலகக் கட்டளைச் சட்டத்தின் கீழ் விதி,— (190ஆம் அத்தியாயமான) அஞ்சல் அலுவலகக் கட்டளைச் சட்டத்தின் 12, 21, 25, 27, 81, 62, 06, 39, 49, 44, 68, 67, 40, 24, 59, 60, 35, 59, 67 மற்றும் 64ஆம் பிரிவுகளின் கீழ், அஞ்சல், தொலைத்தொடர்புகள் அமைச்சரால் நிதி அமைச்சரின் உடன்பாட்டுடன் ஆக்கப்பட்டு, 2007, ஏப்பிறல் மாதம் 25 ஆம் திகதிய 1494/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2007. 07. 17 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான விதி அங்கீகரிக்கப்படுமாக.

*28.

சுகாதார நலத்துறை, போசணை அமைச்சர்,— மருத்துவ கட்டளைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— இலங்கை மருத்துவப் பேரவையுடனான கலந்தாலோசனையுடன் (105 ஆம் அத்தியாயமான) மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் 72 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்டும் 19 ஆம் பிரிவின் கீழ் சுகாதார நலத்துறை, போசணை அமைச்சரால் ஆக்கப்பட்டு 2009 பெப்ரவரி மாதம் 25 ஆந் திகதிய 1590 / 13 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2009.04.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

29.

அரசியலமைப்பிற்கான பத்தொன்பதாவது திருத்தச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

30.

வடக்கு மற்றும் கிழக்கு இரு மாகாணங்களையும் தற்காலிகமாக இணைத்திருப்பதை இரத்துச் செய்வதற்கான (விசேட பிரமாணங்கள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

31.

வாரியபொல ராஜமகா விஹாரை அபிவிருத்திச் சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

32.

பலாத்காரமாக மதம் மாற்றுவதைத் தடைசெய்தல் சட்டமூலம் — பரிசீலனை.

33.

செரண்டிப் கல்வி நம்பிக்கை நிறுவனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

34.

சம்மாந்துறை தப்லீகுல் இஸ்லாம் அரபுக் கல்லூரி (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

35.

எதிர்கால உலக ஒழுங்கமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

---

[1] "சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெறுமாக" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.